# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.9/2021

வாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

-----------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெரியசாமி வா.சா.–1 | சாதி | |
| த/பெ. | சின்னக்காளை | மதம் | |
| கிராமம் | சின்னகட்டங்குடி | தொழில் | கூலி |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 38 |

-----------------------------------------------------------------------

முதல் விசாரணை 11–08–2025.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

2008 முதல் 2021 வரை தாவா சொத்திற்கான வீட்டு வரி ரசீது எண்ணம் 9 அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2013 முதல் 2021 வரை தாவா சொத்திற்கான தண்ணீர் கட்டண ரசீதுகள் எண்ணம் 6 அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2008 முதல் 2020 வரை தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீதுகள் எண்ணம் 35 அசல், எண்ணம்–1 இணையதள நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19.02.2020ம் தேதிய தாவா சொத்திற்கு பட்டா கோரி 2ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனு கைநகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18.03.2020ம் தேதிய தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.08.11 17:03:14 +0530